**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>**

**<u>முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,</u>**

**<u>சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.</u>**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 18-ம் நாள்
2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் புதன் கிழமை

**<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.243/2023</u>**

**CNR No.TNTV14-001400-2023**

சங்கரலிங்கம் ........மனுதாரர்

எதிராக

1) புகழேந்தி

2) கிளை மேலாளர்,
நியூ இண்டியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
கோயமுத்தூர்.

........எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 26.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எஸ்.செந்தில்குமார், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.செல்லபாண்டியன், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திருமதி.டி.கீதா, எம்.ஏ., எம்.எல்., எம்.பி.ஏ., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்........

## உத்தரவு

கடந்த 20.01.2017ம் தேதி காலை 11.30 மணியளவில் வேலூர் ராமர் கோவில் எதிரே நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.5,00,000/- பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்க கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :-**

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான சங்கரலிங்கம் என்பவர் 62 வயதுடையவர் என்றும், காளவாய் மேஸ்திரி மற்றும் விவசாயம் வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்தார் என்றும், இந்நிலையில் மனுதாரர் கடந்த 20.01.2017 அன்று சொந்த வேலையாக வேலூர் சென்றுவிட்டு திரும்ப வீடு வருவதற்காக சைக்கிளில் சாலை விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுறமாக காலை 11.30 மணியளவில் வந்து கொண்டிருந்த போது பின்னால் TN 50 R 7477 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜராக்கரதையாகவும், கவனகுறைவாகவும், சாலைவிதிகளை அனுசரிக்காமலும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தினார்.

ii) இந்த விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும், இந்த விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முட்டியில் எலும்பு முறிவு, இடது கண்ணில் பலத்த காயம், மூக்கில் பலத்த காயம், தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நரம்பு மண்டலம் பாதிப்பு மற்றும் நெஞ்சி இடுப்பு

உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் உள்நோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

iii) இந்த விபத்து குறித்து திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண்: 39/2017 இ.த.ச. பிரிவு 279, 337–ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து ஏற்படுத்திய வாகனம் 1வது எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்றும், இந்த விபத்து வாகன ஓட்டுநரின் செயல்பாட்டால் ஏற்பட்டதாகும். 1வது எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 2வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார் என்றும், மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு தொகையினை எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

iv) மனுதாரருக்கு எலும்பு முறிவு காயம் ஏற்பட்டுள்ளது என்றும், தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் நிரந்தர ஊனம் என்றும், மனுதாரருக்கு வருமான இழப்பும், இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு பெருந்த அளவு மருத்துவ செலவுகள் ஏற்பட்டுள்ளது என்றும், இவ்விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளை எந்தவகையிலும் சரிகட்ட முடியாது என்ற போதிலும் வருமான இழப்பு, நிரந்தர ஊனம், மருத்துவசெலவு இன்னும் பிற இழப்பீடுகளுக்காக குறைந்தபட்சம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம்) கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

**3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கக்கூடியதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், மனுவானது இவ்வழக்கில் இந்த 1ம் எதிர்மனுதாரரால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை இந்த மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார் என்றும், இம்மனுவின் மனுதாரர் காளவாய் மேஸ்திரி மற்றும் விவசாய வேலைகள் செய்து வந்ததின் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/–க்கு குறையாமல் வருமானம் ஈட்டி வந்தார் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக வேலைக்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையினை நடத்தி வருகின்றார் என மனுதாரர் தெரிவித்துள்ளதை மனுதாரரே திரூபிக்க கடமைபட்டுள்ளார்.

ii) மனுதாரர் கடந்த 20.01.2017 அன்று சொந்த வேலையைாக வேலூர் சென்றுவிட்டு திரும்ப வீடு வருவதற்காக சைக்கிளில் சாலை விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுறமாக காலை 11.30 மணியளவில் வந்து கொண்டிருந்த போது பின்னால் டி.என். 50ஆர்.7477 என்ற பதிவெண் கொண்ட ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனகுறைவாகவும், சாலைவிதிகளை அனுசரிக்காமலும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தில் மோதி விற்பனை ஏற்படுத்தினார் என்றும், இந்த விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்பதையும் மனுதாரரே உண்மை என நிருபிக்க கடமைபட்டவர் ஆவார்.

iii. இந்த விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முட்டியில் எலும்பு முறிவு, இடது கண்ணில் பலத்த காயம். மூக்கில் பலத்த காயம், தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நரம்புமண்டலம் பாதிப்பு மற்றும் நெஞ்சி இடுப்பு, உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருவதாக சொல்வதை மனுதாரரே உண்மை என நிருபிக்க கடமைபட்டவர் ஆவார்.

iv. விபத்து ஏற்படுத்திய வாகனம் 1வது எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்பது உண்மைதான் இந்த விபத்து வாகன ஓட்டுநரின் செயல்பட்டால் ஏற்பட்டதாகும் என்பது உண்மையல்ல என்றும், 1வது எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 2வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது உண்மைதான், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் நிரந்தர ஊனம் என்பது உண்மையல்ல.

v) உண்மை என்னவெனில் மேற்படி மனுதாரருக்கு வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் எதுவும் இல்லாமல், சாலை விதிகளை மதிக்காமல், மனுதாரர் வந்து, 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தில் தன்னிச்சையாக தானாகவே கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்பதுதான் உண்மை என்றும், மேலும் விபத்து நடந்ததாக கூறும் மனுதாரருக்கு எவ்வித காயமும் இல்லை

என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தையே சாரும் என்றும், மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் வாகனம், 2ம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து சமயத்தில் மேற்படி காப்பீடும் நிலுவையில் இருந்துள்ளது என்றும், எனவே, மேற்படி இழப்பீடு வழங்கக்கூடிய சம்மந்தப்பட்ட நபர் 2ம் எதிர்மனுதாரரே ஆவார்.

vi) மேலும் கோரப்பட்டுள்ள விபத்து நஷ்ட ஈடு தொகை ரூ.5,00,000/−என்பது மனுவிற்காக அதிகப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்றும், மேலும், மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுனருக்கு செல்லத்தக்க வாகன ஓட்டுனர் உரிமம் இருந்து வருகிறது என்றும், ஒருக்கால் மேற்படி மனுதாரருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடும் பட்சத்தில் அதனை 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனமே செலுத்தி கடமைபட்டுள்ளார். எனவே, மனுவினை 1ம் எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4**. <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :−</u>**

இந்த மனுவில் தகுதிகள் ஏதுமில்லை என்றும், விபத்து தொடர்பாக வாகன உரிமையாளர் / முதல் எதிர்மனுதாரரிடமிருந்து இந்த 2ம் எதிர்மனுதாரர் இதுவரை எந்தவொரு கோரிக்கையையும் பெறவில்லை என்றும், வாகன உரிமையாளர் / முதல் எதிர்மனுதாரர் கோரிக்கைப் படிவத்தையும், வாகன ஆவணங்களையும் சமர்ப்பிக்காததால், ஓட்டுநர்

உரிமம் உள்ளிட்ட வாகன ஆவணங்களின் செல்லுபடியை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியவில்லை என்றும், எனவே, கூறப்படும் விபத்து நடந்த நேரத்தில் முதல் எதிர்மனுதாரர் வாகனம் இந்த 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதை மறுக்கிறார்.

ii) விபத்து நடந்த தேதியில் ஓட்டுநரிடம் செல்லுபடியாகும் மற்றும் நடைமுறையில் உள்ள ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதையும் மறுக்கிறார் என்றும், வாகனம் தன்னிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், கூறப்படும் விபத்து நடந்த தேதியில் முறையாக உரிமம் பெற்ற ஓட்டுநரால் வாகனம் ஓட்டப்பட்டு, அவரிடமும் செல்லுபடியாகும் மற்றும் நடைமுறையில் உள்ள ஓட்டுநர் உரிமம் இருந்தால்தான் இந்த 2ம் எதிர்மனுதாரர் பொறுப்பு எழும் என்றும், விபத்து நடந்த தேதியில் வாகனத்திடம் செல்லுபடியாகும் RC, FC மற்றும் அனுமதி இருந்தது என்பதையும் மறுக்கிறார்.

iii) TN–50–R–7477 என்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் தரப்பில் ஏற்பட்ட எந்தவொரு அவசரச் செயலாலோ அல்லது கவனக்குறைவாலோ இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், மனுதாரர் கூறுவது போல், ஓட்டுநர் மோட்டார் சைக்கிளை அவசரமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டவில்லை என்றும், ஓட்டுநர் மோட்டார் சைக்கிளை மெதுவாக, சீராக, கவனமாக மற்றும் எச்சரிக்கையுடன் தனது சரியான பக்கத்தில் ஓட்டினார் என்றும், மறுபுறம், மனுதாரர் மோட்டார் சைக்கிளைக் கவனிக்காமல் சாலையைக் கடந்து, கவனக்குறைவாக விபத்தை வரவழைத்துக்

கொண்டார் என்றும், எனவே, விபத்திற்கு ஓட்டுநர்/முதல் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல.

iv) மேலும், புகழேந்தி/முதல் எதிர்மனுதாரர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் விபத்து நடந்த நேரத்தில் ஒரு மைனர் ஆவார், மேலும் அவர் எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் ஓட்டத் தகுதியற்றவர், இது ஒரு சட்ட மீறலாகும் என்றும், காப்பீட்டுக் கொள்கை, ஓட்டுநர் உரிமம் மற்றும் விபத்து ஆகியவை குறித்து வாகன உரிமையாளரிடமிருந்து கூடுதல் விவரங்களைப் பெற்ற பிறகு, ஒரு கூடுதல் எதிர் மனுவைத் தாக்கல் செய்ய இந்த 2ம் எதிர்மனுதாரர் அனுமதி கோருகிறார் என்றும், மேலும், கூறப்படும் விபத்து நடந்த நேரத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்கவில்லை என்றும், இரண்டாவது எதிர்மனுதாரர் காப்பீட்டுக் கொள்கையின் நிபந்தனையை மீறியுள்ளதால், மேற்கூறிய கோரிக்கைக்கு 2ம் எதிர்மனுதாரர் பொறுப்பேற்க மாட்டார் என்றும், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே பொறுப்பாவார்.

v) கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகை மிக அதிகமாகவும், எல்லா வகையிலும் பொருத்தமற்றதாகவும் உள்ளது என்றும், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படவில்லை என்றும், எனவே, கூறப்படும் விபத்தின் காரணமாக அவருக்கு எந்தவிதமான நிதி இழப்பும் ஏற்படவில்லை என்றும், காயங்களின் தன்மை, சிகிச்சைக் காலம், கூறப்படும் ஊனம், வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை மனுதாரர் கடுமையாக நிரூபிக்க வேண்டும்

என்றும், மருத்துவமனைக்குச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு, கூடுதல் ஊட்டச்சத்து, மருத்துவச் செலவுகள் மற்றும் உதவியாளர் செலவுகள் ஆகியவற்றுக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், எனவே இந்த மனுவைச் செலவுகளுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. பிரச்சனை**:–

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?

3. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் சங்கரலிங்கம் என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆதித்ய விஸ்வா நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ கம்பெனி, தஞ்சாவூர் **எ.ம.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.5** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. வித்யா இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்துக் கழகம், தண்டலச்சேரி என்பவர் **எ.ம.சா.2**ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:-</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் சங்கரலிங்கம் என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

**7. ம.சா.1 தனது சாட்சியத்தில்**

" நான் கடந்த 20.01.2017 தேதியன்று சொந்த வேலையாக வேலூர் சென்றுவிட்டு திரும்ப வீடு வருவதற்காக சைக்கிளில் சாலை விதிகளை அனுசரித்து சாலையின் இடதுபுறமாக காலை 11.30 மணியளவில் வந்து கொண்டிருந்த போது பின்னால் TN 50 R 7477 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும், கவனகுறைவாகவும், சாலைவிதிகளை அனுசரிக்காமலும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினார்.இந்த விபத்தில் எனக்கு பலத்த காயம் ஏற்பட்டது. " என சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், **ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கையில்**

" இன்று 20.01.2017ம் தேதி காலை எனது மாமனார் சங்கரலிங்கம் சொந்த வேலையாக வேளூர் வரை போய் விட்டு வருவதாக கூறி தனக்கு சொந்தமாள சைக்கிளில் சென்றார் நான் வீட்டில் எனது வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தேன். எனது கணவரும் வேலைக்கு சென்று விட்டார். பகல் 11.30 மணி சுமாருக்கு நான் வீட்டில் இருந்தபோது எனது மாமனார் சங்கரலிங்கம் வேளூருக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு சைக்கிளில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக வந்து கொண்டிருந்தபோது பின்னால் அதிகவேகத்தோடும், அஜாக்கிரதையாகவும் வந்த டூ வீலர் வேளூர் ராமர் மடம் அருகே எதிரே ரோட்டில் சென்ற எனது மாமனார் மீது மோதிவிட்டார். " என கண்டு எழுதப்பட்டுள்ளது.

மேலும், ம.சா.1—ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2ஆன டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் உள்ள மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டது என்பதும், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் (புகழேந்தி என்பவரின்) அதிவேகமும், அஜாக்கிரதையும் கவனக்குறைவு தான் இவ்விபத்திற்கு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1—வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. <u>**பிரச்சனை எண்.2க்கு தீர்வு :—**</u>

இம்மனுவில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 50 R 7477 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் தான்

என்று மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பது குறித்து நாம் இங்கு பரிசீலிக்க வேண்டி உள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆக ஆதித்ய விஸ்வா என்பவர் அவருடைய சாட்சியத்தில்

" கடந்த 20.01.2017 அன்று பகல் 11.30 மணியளவில் இந்த மனுவின் மனுதாரர் சங்கரலிங்கம் தனது இருசக்கர வாகனத்தில் சைக்கிளில் வேளூர் இராமர் கோவில் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தபோது 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–50–R–7477 என்ற எண்ணுள்ள இருச்சக்கர வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரரான புகழேந்தி என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மனுதாரர் மீது மோதியதால் காயம் ஏற்பட்டுள்ளதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தின் போது மனுதாரர் சங்கரலிங்கம் பின்னால் வந்த இருசக்கர வாகனத்தை கவனிக்காமலும், சைகை காட்டாமலும் குறுக்கே சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அதனால் மனுதாரரும விபத்திற்கு கூட்டு பொறுப்பு ஏற்கவேண்டும். மேலும் விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளரும், ஓட்டுநருமான புகழேந்தி என்பவருக்கு விபத்து சமயத்தில் வயது 17 ஆகும். மைனர் என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தியுள்ளதால், 1ஆம் எதிர்மனுதாரரே இந்த விபத்திற்கு முழு பொறுப்பேற்கவேண்டும்.

விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனம் விபத்து தேதியில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமலில் இருந்தாலும், விபத்து நேரத்தில் மைனர் புகழேந்தி காப்பீட்டு விதிமுறைகளை மீறி வாகனத்தை ஓட்டியதால் எங்களது நிறுவனம் நஷ்டயீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மேலும் 1ஆம் எதிர்மனுதாரரான மைனர்.புகழேந்தி விபத்திற்கு பின்பு கடந்த 21.02.2018 ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளார். அவர் பிறந்த தேதி 22.06.1999 ஆகும். விபத்து நடந்த நாள் 20.01.2017 ஆகும். மேலும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள மோட்டார் ஆய்வாளர் அறிக்கையிலும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதும் தெரிக்கப்பட்டுள்ளது. மேலும் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் 1ஆம் எதிர்மனுதாரரான மைனர் புகழேந்தியின் பெற்றோர்கள் மைனரை ஓட்டுவதற்கு அனுமதி அளித்ததால் விபத்திற்கு மைனரின் சார்பாக அவரது பெற்றோரும் பொறுப்பு என்று கருதி அவ்வாறு மனுதாரருக்கு நஷ்டயீடு கொடுக்கவேண்டுமென்று சமூகம் நீதிமன்றத்தார் கருதும் பட்சத்தில் வாகன உரிமையாளரும், ஓட்டுநருமான 1ஆம் பெற்றோர்களோ அவரது காப்பாளர்களோ நஷ்டயீடு எதிர்மனுதாரரின் தொகையில் பொறுப்பேற்கவேண்டுமென்றும், அதனடிப்படையில் மேற்கண்ட மனுவை பொறுத்தவரை எங்களது 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை பொறுத்து மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுப்படி செய்ய வேண்டும் " என சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், எ.ம.சா.2ஆன அவரது முதன்மை சாட்சியத்தில்

" விபத்தானது கடந்த 20.01.2017–ல் ஏற்பட்டது. அப்போது 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை.

1ம் எதிர்மனுதாரர் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற எப்பொழுது மனு கொடுத்தார் என்றால் 21.02.2018–ல். " என சாட்சியம் அளித்துள்ளார்.

அதை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவணங்களையும், சாட்சிகளையும் பரிசீலனை செய்து கீழ்கண்ட மாண்புமை உச்ச நீதிமன்றம் வழங்கிய முன் தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

**IN THE SUPREME COURT OF INDIA**

**CIVIL APPELLATE JURISDICTION**

CIVIL APPEAL NO(S). OF 2025

[Arising out of SLP (C) Nos. 1970-1971 OF 2023]

SACHIN YALLAPPA USULKAR & ORS. ...APPELLANT(S)

VERSUS

VIJAYATA & ORS. ...RESPONDENT(S)

SATISH CHANDRA SHARMA, J

J. [B. V. NAGARATHNA]

என்ற வழக்கில் தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில் மைனர் வாகனத்தை ஓட்டி விபத்து நடைப்பெற்றால் அந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை செலுத்தி இதே வழக்கு நடவடிக்கையில் வாகனத்தின் உரிமையாளர் அதாவது மைனர் நபரின் பெற்றோர்கள் தான் இழப்பீடு வழங்க பொறுப்புடையவர்கள் ஆவார்கள் என தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்வு காணவிரும்புகிறது.

மேலும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்திற்கான விபரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பது எ.ம.சா.1

மற்றும் எ.ம.சா.2 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் விபத்தானது 20.01.2017–ம் தேதியன்று நடைபெற்றுள்ளதால் 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதும், ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் வயது 17 என்பதும், மைனர் என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் (Driving License) பொறுவதற்கு வாய்ப்பு இல்லை என்பது **எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2** சாட்சியத்திலிருந்தும், **ம.சா.ஆ.5 (காலம் எண்.7)** ஆவணங்களிலிருந்தும் தெளிவாக தெரியவருகிறது. மேலும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனமானது 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு 11.04.2016 முதல் 10.04.2017 வரை நிலுவையில் இருந்துள்ளது என்பது **ம.சா.ஆ.4** மற்றும் **எ.ம.சா.ஆ.4** ஆகிய ஆவணங்களிலிருந்தும் தெரிய வருவதால் இந்நீதிமன்றம் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய கீழ் கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

" மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் சுவரன் சிங் 2004(1) TNMAC 104(SC)** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பின்படி பார்க்கும்போது தற்போதைய மோட்டார் வாகன சட்டத்தில் பிரிவு 150(4)ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் தற்போது செலுத்திவிட்டு பெறுக என்ற கோட்பாடு அமுலில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது". மேற்படி விளக்கங்கள் ஏற்கதக்க வகையிலும் மேற்படி கொள்கை தற்போதும் நடைமுறையில் உள்ளது என்பதை நியாயப்படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளது. இதனால் தற்போது **செலுத்திவிட்டு பெறுக** கோட்பாடு நடைமுறையில் உள்ளது என

இத்தீர்ப்பாயம் கருதுகிறது. இதனை தொடர்ந்து இந்த வழக்கில் மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டும் என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்யும் இழப்பீட்டு தொகையினை விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி 2ம் எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையினை 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களே மைனர் புகழேந்தி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என தெரிந்தே வாகனத்தை ஓட்டிச்செல்ல கொடுத்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்ற காரணத்தினால் **காப்பீட்டு விதிமீறல்** புரிந்த வாகனத்தின் உரிமையாளரின் பெற்றோர்களிடமிருந்து (1ம் எதிர்மனுதாரர் பெற்றோர்களிடமிருந்து) இதே வழக்கு நடவடிக்கையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என 2வது பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. **பிரச்சனை எண்.3க்கு தீர்வு**

இந்த மனுவில் மனுதாரர் சங்கரலிங்கம் என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் மனுதாரருக்கு இடது கால் முட்டியில் எலும்பு முறிவு, இடது கண்ணில் பலத்த காயம், மூக்கில் பலத்த காயம், தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நரம்பு மண்டலம் பாதிப்பு மற்றும் நெஞ்சி இடுப்பு உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் உள்நோயாளியாகவும் சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது

தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 13% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி **நீ.ம.சா.ஆ.1**ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின்** M.Chinnathambi Vs. S.Dheepa and another, 2020(1) TN MAC 617-ல் வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.5,000/- வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.5000/- வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 13% என்பதால் (13%x5000) அவர் 65,000/- இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.15,000/-ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரர் காளவாய் மேஸ்திரி மற்றும் விவசாயம் வேலை செய்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon'ble Madras High court has fixed the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others

Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

**11.** மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ, வேறு இதர வேலை செய்பவராக இருந்தாலும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ.300 எளிதாக சம்பாதித்திருப்பார் என்றும், நாள் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.9000/- சம்பாதித்து

இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.9,000/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 9000 x 3மாதம்) ரூ.27,000/-மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.10,000/-ம், உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/-ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/-ம் மற்றும் வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/-ம் வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**12.** மனுதாரர் சங்கரலிங்கம் என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 13% நிரந்தர ஊனத்திற்கு (13%x5000) | ரூ.65,000/- |
| வலி வேதனைக்கு | ரூ.15,000/- |
| வருமான இழப்பீடுக்கு (9000x3) | ரூ.27,000/- |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.10,000/- |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/- |
| போக்குவரத்து செலவு | ரூ.5,000/- |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/- |
| மொத்தம் | ரூ.1,37,000/- |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.1,37,000/– சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433–ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.1,37,000/–ஐ, 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (20.07.2023) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடாக இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க உத்தரவிடப்படுகிறது. 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) என்ற இந்நீதிமன்ற கணக்கில் பணத்தை வைப்பீடு

செய்துவிட்டு அவ்வாறு 2ம் எதிர்மனுதாரர் செலுத்தும் இழப்பீட்டுத் தொகையினை காப்பீட்டு விதிமீறல் (ஓட்டுநர் உரிமம் இல்லை) புரிந்த காரணத்திற்காக விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் பெற்றோரிகளிடமிருந்து (மைனர்.புகழேந்தியின் பெற்றோர்கள் மைனரை ஓட்டுவதற்கு அனுமதி அளித்ததால் விபத்திற்கு மைனரின் சார்பாக அவரது பெற்றோர்களடமிருந்து) இதே வழக்கு நடவடிக்கையில் வசூல் செய்து கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. இழப்பீட்டு தொகையை வங்கி கணக்கில் NEFT/RTGS மூலம் வழங்க வேண்டும் என்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. விபத்தானது 2017–ல் ஏற்பட்ட காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்த பின்னர் மனுதாரர் உடனே பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.370/– உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.5,740/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற** வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.04.10 19:41:23 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**செலவுத் தொகை பட்டியல்**

| **மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல்** | **தொகை** | |
|---|---|---|
| | **ரூ.** | **பை.** |
| நீதிமன்ற கட்டணம் | 742 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 30 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 5740 | 00 |
| சம்மன்படி | 9 | 00 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 6631 | 50 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.6,632/—ஐ 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

**1. <u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:—**

ம.சா.1 சங்கரலிங்கம் (மனுதாரர்)

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.01.2017 | முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 26.01.2017 | டிஸ்சார்ஜ் சம்மரி – நகல் |
| ம.சா.ஆ.3 | 22.04.2016 | வாகனத்தின் ஆர்.சி. புக் – நகல் |
| ம.சா.ஆ.4 | 11.04.2016 – 10.04.2017 | இன்சூரன்ஸ் பாலிசி – நகல் |
| ம.சா.ஆ.5 | 31.01.2017 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை – உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | –– | மனுதாரர் பெயரிலுள்ள ஆதார் அட்டை – நகல் |

**3. நீதிமன்ற சான்றாவணம்:–**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 10.03.2025 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

**4. 2ம் எதிர்மனுதாரர் சாட்சி :–**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | ஆதித்ய விஸ்வா – நிர்வாக அதிகாரி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி, தஞ்சாவூர். |
| எ.ம.சா.2 | வித்யா – இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்துக் கழகம, தண்டலச்சேரி. |

**5. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.11.2025 | 1ம் எதிர்மனுதாரர் புகழேந்திக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்ல் ரசீதியுடன் – அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | 03.11.2025 | வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை – கணிணி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 21.02.2018 | 1ம் எதிர்மனுதாரர் புகழேந்தி விபத்திற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஓட்டுநர் உரிமம் – நகல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான காப்பீட்டு பாலிசி – உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.5 | -- | அதிகார ஆவணம் – அசல் |

M
RAVICHANDRAN

Digitally signed
by M
RAVICHANDRAN
Date: 2026.04.10
19:41:30 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.